ஜனவிநோதினி.

இல. 2.] பெப்ருவரிமீ 1875. [புஸ்த. VI.

யானைத்தீவிலுள்ள குகைகள்.

பம்பாய்ப்பட்டணத்துக்கு அருகாமையில் யானைத்தீவு என்னும் ஓர் தீவு இருக்கிறது. அதில் ஒரே கல்மலையிலிருந்து வெட்டப்பட்டு வெகுகாலமாய் விசித்திரகாட்சிகளில் ஒன்றுகப் பிரசித்தி பெற்றிருக்கிற கோயில் ஒன்றுண்டு. அம்மலைக் குகைக்குப்போகும் வழியின் முற்புறத்தில் அதிக உன்னதமான ஒரு யானை உருவம் நிற்கவைத்திருக்கிறது; இதுவும் கோயிலைப்போல ஒரு பாறையினின்று வெட்டப்பட்டதே; இதனுலேதான் அத்தீவு அப்பெயர் பெற்றிருக்கிறது. எத்தனையோ வருஷகாலமாய் வெயிலில்காய்ந்து மழையில் நனைந்து இப்போது அந்த யானைரூபம் ஏறக்குறைய முற்றும் பாழாகப்போயிருக்கிறது; கோயிலுக்கும் அதேகதி சீக்கிரத்தில் நேரிடும்போலும். அது எப்போது எந்த ஜாதியாராலே கட்டப்பட்டதோ தெரியாது; அதை அறிந்துகொள்ள யாதொரு குறியையும் காணும். ஆகிலும் நன்ருக யோசித்தால், அது மிகவும் அநாதியானதென்று சொல்ல இடமில்லை.

220 அடி நீளமும், 150 அடி அகலமும் உள்ள அக்கோயிலில், அண்டாத பெரிய பெரிய ஸ்தம்பங்கள் நான்கு வரிசைகளாக நின்று மேற்பரப்பைத் தாங்குகின்றன. உயரம் எல்லாப்பக்கத்திலும் ஒரே அளவாயிராமல் ஒருபக்கத்துக்கு ஒருபக்கம் அரை அடி ஒரு அடி வித்தியாசமுள்ளதாய், 14 அல்லது 15 அடி இருக்கும். சுவர்களில் செய்திருக்கும் கல்வேலைகளின் விசித்திரத்தைச் சொல்லி முடியாது. இவ்வளவெல்லாம் அழகாயிருந்தும், அதற்குள் நின்று பார்த்தால் குகைக்குள் இருக்கிறுமென்று தோன்றுமேயல்லா

மல், குகையென்கிற ஞாபகம் வராமற்போகாது. வலப்பக்கம் இடப்பக்கம் இரண்டிலும் சிறு சுரங்கங்களுக்கு வழிகள் போகின்றன. ஒருபக்கத்தில் பாறை அடிமட்டும் நீர் எட்டியிருக்கிறது; மற்றொருபக்கத்தில் ஸ்நானயோக்கியமான இரண்டு சிறு குளங்கள் இருக்கின்றன.

அக்கோயில் பிற்காலத்து நாகரீகச் சிற்பசாஸ்திரப்படி அமைந்திராமல் இரண்டோர்விஷயத்தில் மாறாயிருந்தபோதிலும், வெளியிலிருந்து பார்க்கும்போது அது மிகவும் காம்பீரியமாகத் தோன்றுவதன்றி மனதுக்கு என்னென்னவோ அதிசயத் தோற்றங்களும் உண்டாகின்றன. அநந்தமான வேலைப்பாட்டையும், அதற்குப் பிடித்திருக்கும் எண்ணிறந்த சிற்பிகளையும் கருவிகளையும் அதை அம்மாதிரி கட்டும்படி முதல்முதல் ஏற்பாடுசெய்த புத்திவல்லமை சாமர்த்தியத்தையும் நினைத்துப்பார்க்கின், மிகவும் ஆச்சரியகரமாயிருக்கின்றது.

பசியாமுன் புசியேல்.

நாம் பூரணமாய் ஆகாரம் உட்கொண்டால் அது நன்றாய் ஜீரணமாகிவிட நாலு ஐந்து மணிநேரம் செல்லும். அப்பால் வயிற்றில் ஒன்றுமில்லாமல் சற்றுநேரம் சும்மாயிருக்கையில் பசித்தோற்றம் உண்டாகி, இனி ஆகாரம் கொள்ளென்று அறிக்கையிடுவதுபோல் ஆகின்றது. அப்போது சாப்பிடுவதுதான் ஆரோக்கியமாய் தேஹத்துக்கு அநுகூலத்தைத் தரும்.

நல்ல பசியெடுப்பதற்குமுன் அதாவது வயிற்றில் முன்கொண்ட ஆகாரம் ஒன்றுமில்லாமல் சூன்னியமாகிறதற்குமுன் உண்ணுவோமாயின், இந்த புதிய உண்டி சரித்தும் சரியாதிருக்கும் பழைய ஆகாரத்தோடு சேர்ந்து வயிற்றில் கோளாறு உண்டாக்கி, ஜீரணக்கருவியை மந்தப்படுத்திவிடும். ஆகையால் அடுத்தடுத்து சிற்சிலவாகச் சாப்பிட்டுக்கொண்டேயிருப்பதைவிட திருப்தியாக ஒரேதரமாய் உண்டு சிலமணிகாலம் சும்மாயிருப்பதே நலம்.

சிறுகுழந்தைகளுக்கு ஜீவனைக் காப்பாற்றுவதல்லாமல் சரீரமும் வளரவேண்டியிருப்பதால் முதிர்ந்தவர்களைவிட சற்று அடிக்

கடி அவர்கள் ஆகாரங்கொள்ளத்தான்வேண்டும். அக்குழந்தைகளையும் பசித்துச் சாப்பிடப் பழக்குவதே உசிதமாம். அவைகளை சிணுகுசெய்யாமல் வைத்திருக்க வழிதெரியாத தாய்மாரும் தாதிமாரும் எப்படியாவது அக்குழந்தைகள் இன்பமாய்க் காலம்போக்கட்டுமென்றும் அழாமல் சும்மாயிருந்தால் போதுமென்றும் இடைவிடாமல் ஏதாவது சிற்றுண்டியைக் கொடுத்துவருகிறார்களே, அது மிகவும் கெட்டவழக்கந்தான். இப்படி வாய் ஓயாமல் சாப்பிடுவதால் காலபோஜனத்தில் விருப்பம்தப்பி ஜீர்ணக்கருவி பலவீனப்பட்டு இனிப்பான சிற்றுணவைமாத்திரம் ஆபேக்ஷிக்கும். அன்றியும் அடிக்கடி நோய்கொண்டு அழுமூஞ்சிக் குழந்தைகளாய் நின்று,அவைகளைத் தாய்மார் வாயைக் கட்டிவைத்திருந்தால் என்ன வருத்தப்படுத்துமோ அதிலும் அதிக வருத்தத்தை உண்டாக்கும்.

இதற்கோர் திருஷ்டாந்தம்:—கந்தைத்துணியை உடுத்து வீடு வீடாய்ச் சென்று இரக்கும் ஒரு பிச்சைக்காரி தன் குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு, ஒரு வீட்டு நடையில் நின்று இது பசியினால் மிகவும் வருந்துகிறது. இதற்கு ஏதாவது கொஞ்சம் சாப்பாடு போடுங்களென்று கேட்டாள். அவ்வீட்டு யஜமானி உடனே இரக்கமுற்று ஒரு தோசைத்துண்டைக் கொண்டுவந்து அக்குழந்தைகையில் கொடுக்கவந்தாள். அது கையால் அதைத் தள்ளிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டு அழத்தொடங்கிற்று. அவ்வீட்டுக்காரி இதென்னகாரணம். ஏன் இதை வாங்கிக்கொள்ளவில்லை என்று வினவ, "அம்மணி! அந்த தோசையின்மீது கொஞ்சம் சர்க்கரை தூவினால்தான் இது தின்னும்" என்றாள். அப்பெருமாட்டி அப்படியே கொஞ்சம் சர்க்கரை தூவிக்கொண்டுவந்து கொடுத்தாள். அதை அது வாங்கிக்கொண்டதைப்பார்த்து, இது என்ன புத்தியீனம்! உண்ணச் சோறுகிடையாத இந்த ஏழைப் பெண் தன் குழந்தைக்கு இவ்வளவு உருசி உண்டுபண்ணக்கூடுமா! என்று பரிதாபப்பட்டாள்.

பசியறிந்து உணவுகொள்ளவேண்டுமென்பதும் சிற்றுண்டி உண்ணுதொழியவேண்டுமென்பதும், தன் குடிவாழ்க்கைக்குத் தக்க ஆரோக்கியமான உணவே உசிதமென்பதும் இதனால் விளங்கும். "மீதூண் விரும்பேல்" என்று ஔவையும் சொல்லியிருக்கிறாள்.

சமுத்திரம் உப்பாயிருப்பதேன்?

முன்னொருகாலத்தில் பாரி வர்த்தகனொருவன் தூரதேச யாத்திரை பண்ணவேண்டுமென்று நிச்சயித்து, அதற்கு வேண்டிய மனுஷர்களைச் சேகரம்பண்ணி ஒரு பெரிய கப்பலையும் சித்தம்பண்ணினான். அப்படியே புறப்படுவதற்காக ஏற்படுத்தியதினத்தில் எல்லோரும் கப்பல்யாத்திரை போகச் சன்னத்தராயிருக்கும்போது, எஜமானாகிய வர்த்தகன் கப்பலிலிருந்தவர்கள் அனைவரையும் நோக்கி, என்னிடம் அன்புள்ளவர்களே! நாம் கப்பலேறி யாதொரு அபாயத்தையும் பாராமல் வெகுதூரம் போகப் புறப்படுகிறோம். நீங்கள் எனக்காக வேலைசெய்வதற்கு வருகிறீர்கள்; ஆயினும் இத்தருணத்தை நீங்களும் கைவிடாமல் உபயோகப்படுத்திக்கொள்ளுவது நியாயமே. நாம் போகிறது மிகவும் ஐஸ்வரியமுள்ளதேசம். எந்தவேலையாகட்டும் யுக்தியாய் யார்செய்கிறானோ, அவன் சீக்கிரத்தில் பணஞ்சம்பாதித்துப்போடலாம். அப்படிப்பட்ட தேசத்துக்குப்போய் சும்மாவருவானேன். ஆகையால் நீங்கள் உங்கள் சக்திக்குத் தகுந்தபடி இங்கிருந்து சாமான்கள் ஏற்றிக்கொண்டுபோய் அவ்விடத்தில் சொந்தமாய் வர்த்தகம் பண்ணி அதனால் கிடைக்கும் லாபத்தை நீங்களே அடையலாம். நீங்கள் அப்படிச் செய்வதனால் எனக்கு ஒரு நஷ்டமுமில்லாதபடியால் அதற்கு நான் யாதொரு ஆட்சேபமும் பண்ணாததுமன்றி, அப்படிச் செய்யும்படிக்குப் புத்தியும் சொல்லுகிறேன். அதுமாத்திரமா! உங்களில் யார் அதிக உழைப்போடும் ஊக்கத்தோடும் வேலைசெய்து கெட்டிக்காரனென்று பேர்பெறுகிறானோ அவனுக்கு நான் திரும்பிவரும்போது வெகுமானம் பண்ணப்போகிறேன்; ஏனெனில் முயற்சியைத் தூண்டுவது நலம். இன்னும் இரண்டுநாள் செலவுகொடுக்கிறேன்; அதற்குள் நான் சொன்னபடி செய்யத்தகுந்த ஜாக்கிரதைபண்ணிக்கொள்ளுங்கள்; மூன்றாம்நாள் விடியனேரத்தில் புறப்பட அட்டிபண்ணாமல் தயாராயிருக்கவேண்டும் என்றான்.

அதுகேட்டு அவர்கள் எல்லோரும் சந்தோஷமடைந்து கப்பலைவிட்டுக் கரைசேர்ந்து தமக்குள்ள பணத்தை தமக்கிஷ்டப்படி சொந்தவர்த்தகத்துக்காக வினியோகப்படுத்திக்கொண்டார்கள். ஆயினும் புதிதாய் வேலையில் புகுந்த ஒரு சிறுவன் காசுக்குக்கூட வழியில்லாதவனாய் தன் தோழர்கள் பற்பல சரக்குகளை வாங்கிக்கொண்டுவந்து பின்னே அகப்படப்போகிற லாபத்தை நோக்கிப் பெருமைபொங்கிநிற்க, அவர்களைக் கண்டு துக்கித்து என்னசெய்யப்போகிறேனென்று திகிலடைந்தான். எப்படியானாலும் ஒரு கை பார்ப்போமென்று சரேலென்று புறப்பட்டு உபகாரசிந்தையும் விவேகமுமுள்ள தன் கிழ அத்தையண்டைக்குப்போய், அம்மா, என் நேசர்கள் அனைவரும் வேண்டும் சரக்குகளை ஏற்றிக்கொண்டு வர்த்தகம்பண்ணி லாபமடைய கப்பலேறி தேசாந்தரம் போகிறார்கள்; வெறுங்கையனாய் அவர்களோடு கூடப்போக வெட்கமாயிருக்கிறது; இந்த வேளையில் என்னைக் காப்பாற்றவேண்டுமென்று வேண்ட, அவள் குழந்

தாய்! ஆம் மெய்தான், உனக்கு அதிர்ஷ்டமில்லாவிடின் யார் என்ன செய்யலாம்; இப்படியே உன் தகப்பன் உள்ளளவும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தான். நீயும் அவஸ்தைப்பட பிள்ளைபிறந்திருக்கிருய். என் இருப்பைப்பார்த்தால் நீயே தாவிளையென்னலாம்; இத்தருணத்தில் நீ என்னிடம் வந்தாய், என்னசெய்யலாமென்றுள். அவளில்லையென்று சொல்லவே அச்சிறுவன் அம்மா என் தோழர்கள் இப்போதே என்னைப் பரிகாசம் செய்கிறது சொல்லத்திறமில்லை; மேலும் நான் சும்மாபோனுல் அவர்கள் என்னை எவ்வளவு அலட்சியமாய் நினைப்பார்கள்; நான்தான் அவர்கள் முகத்தை என்னமாய்ப் பார்ப்பேன் என்று புலம்பினுன். அவள் அதைக்கேட்டு அவன் புத்தியைப்பார்த்து அதிசயித்து, மகனே! நான் உனக்குப் பொன்னையும் பொருளையும் கொடுத்துக் குதூகலமுண்டாக்கப் போகிறதில்லை. ஆகிலும் ஒன்று தருகிறேன்; அதைமாத்திரம் நீ செம்மையாக உபயோகப்படுத்திஞல் விசேஷ பலன்பெறலாமென்று சொல்லி எழுந்திருந்து உள்ளேபோனுள். அதுகண்டு அச்சிறுவன் அத்தையார் என்னவோ கொடுக்கிறதாகச் சொல்லி எழுந்துபோனுளே, என்ன கொண்டுவந்து கொடுப்பாளோ, அதனுல் என்ன லாபங்கிடைக்குமோவென்று சிந்தித்துக்கொண்டிருந்தான். உள்ளே போனவள் உடனே ஒரு யந்திரத்தைக் கொண்டுவந்து, அப்பா குழந்தாய், பார்வைக்கு நன்ருயிருக்கவில்லையென்று நீ இதை அலட்சியம்பண்ணுமல், யுக்தியாய்க் கையாடினுல் பொன் வெள்ளிமுதலியனதவிர மற்றை வேண்டுவனவற்றையெல்லாம் கொடுக்குமென்று சொன்னுள். பையன் அவளேதோ ஒன்று தனக்குக் கொடுக்கவே அதிக சந்தோஷமடைந்து, அம்மா இதை எப்படி உபயோகிக்கவேண்டும் என்று வினவ, அவள் அப்பா அது வெகு விசித்திரமானது; இதோ காண்பிக்கிறேன் பார், இப்போது உனக்கு என்னவேண்டும் சொல் என்ன, அவன் இவள் ஏதோ வேடிக்கைகாட்டப் போகிருளென்று, தாயே நான் இன்றைக்கு காலைமுதல் சுத்தமாய் அன்னுகாரமில்லாமல் மனக்கவலையுற்றிருக்கிறேன். இப்போது தக்கதாய் ஏதாகிலும் ஆகாரம் கொடுப்பாயாகில் பிழைப்பேனென்றுன். உடனே அவள் அந்த யந்திரத்தை ஒரு பலகையின்மேல் வைத்து நிதானமாய் மெல்லிய சத்தத்தோடு யந்திரமே யந்திரமே சுடச்சுடக் கொஞ்சம் தோசை உண்டாக்கிக் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்தித்தாள். தட்சணமே அது சுழன்று அப்போதுதான் பண்ணினதுபோலப் புசிக்கபக்குவமாய் தோசை உண்டாக்க ஆரம்பித்தது. வேண்டிய அளவு சேர்ந்தபிறகு அவள் வீரயந்திரமே போதும்போதும் நிற்கலாம் என்ன, அதுவும் சட்டென்று நின்றுவிட்டது. பையன் அந்த அதிசயத்தை உன்னிப்பாய்க் கவனித்து அத்தோசையைப் பசியாறப்புசித்து திர்ப்தியடைந்து, யந்திரம் அசையும்படி சொல்லவேண்டிய சொற்களையும், அது நிற்கும்படி சொல்லவேண்டிய சொற்களையும் அத்தையினின்று உருப்போட்டு ஒருக்காலும் மறவாதபடிக்கு மனதில் பதித்துக்கொண்டு, யந்திரத்தை அக்குளில் அடக்கி அவளிடம் செல்வு பெற்றுப் புறப்பட்டு உல்லாசத்தோடு தோழர்களைச் சேரப்போனுன். அவன் கொண்டுவந்த யந்திரத்தைப்பார்த்து அவர்கள் பெருநகைநகைத்து வெகு நேரம் பரியாசம்பண்ணினுர்கள். அவன், அவர்கள் இதன் மர்மம் தெரியாமல் நகைக்கிருர்கள், சுகமாய் நகைக்கட்டும் என்று தன்பாட்டுக்குத் தான் யந்திரத்தை ஒரு மூலையில் ஒளித்துவைத்துவிட்டு, எப்படி வேலைசெய்

தால் அதிக பலன்பெறலாமென்று வழியெல்லாம் ஆலோசனைபண்ணிக் கொண்டேபோனான்.

யாத்திரைமுடிந்து கருதியதேசஞ் சேர்ந்தவுடன் யாவரும்போல அச்சிறுவனும் எஜமானண்டைவந்து தெண்டனிட்டு, தான் தன் வேலையை நடத்துவதற்காக உத்தரவுகேட்க, அவன்: அப்படியே ஆகட்டும்; நல்லது, நீ என்னவேலை செய்யப்போகிறாய்? எனக்கு நம்பிக்கையாயிருக்கவில்லை என்றான். அதற்கு அந்தப் புதுவேலைக்காரன்: ஐயனே! அது நாளாவர்த்தியில் நன்றாய்த் தெரியவரும்; ஆயினும் அதற்குத் திர்ஷ்டாந்தமாக ஒன்று பாருங்கள். தங்களுக்கு இப்போது வேண்டிய பொருளைக் கூறினால் நாளை இந்நேரத்துக்குள் உண்டுபண்ணிக் கொடுக்கிறேன் என்ன, அத்தலைவன் பையன்பேச்சைப் பரிசோதிப்போமென்று நான் கொண்டுவந்த எலுமிச்சம்பழம் ஆய்விட்டது; ஆகையால் நீ நாளைக்கு நூறு எலுமிச்சம்பழம் கொண்டுவா, அதற்குள்ள கிரயத்தைக் கொடுத்துவிடுகிறேன் என்றான். அதன் பேரில் அப்பையன் தன் யந்திரத்தை எடுத்துக்கொண்டு ஏகாந்தமான ஓரிடத்திற்குப்போய் நல்ல உன்னதஸ்தானத்தில் அதை வைத்து: யந்திரமே, யந்திரமே, நல்ல எலுமிச்சம்பழம் கொடுக்கக்கடவை என்று அதை வேண்டிக்கொண்டான். அவ்யந்திரமும் அப்போதான் மரத்திலிருந்து பறித்தது போல மிகுந்த மேனியுள்ள எலுமிச்சம்பழங்களை உண்டாக்கிற்று; நூறு பழம் ஆகிறவரையில் சும்மாவிருந்து, பிறகு வீரயந்திரமே, போதும்போதும், நிற்கலாம் என்று அத்தை சொற்படியே சொல்லி அதை நிறுத்திவிட்டுப் பழத்தை வாரிக்கொண்டு எஜமானிடஞ்சென்றான். அவன் பையன் சாமர்த்தியத்தைக் கண்டு மகிழ்ந்து வெகுமதிபண்ண, அதைப் பெற்றுக்கொண்டு அப்புதியவேலைக்காரன் சொந்தவியாபாரம் செய்வதற்காக ஒரு மாசகால வாயிதாவும் கேட்டுக்கொண்டுவந்து, அவ்வூர் கடைத்தெருவில் ஓரிடம் குடிக்கூலிக்கு வாங்கிக்கொண்டு, தெருவில் இவ்விடத்தில் கேட்ட மறுநாளைக்குள் எவ்வித சாமானும் பாதி கிரயத்துக்குச் சாக்கிரதை செய்யப்படும் என்று எழுதி எல்லோருக்கும் அறிக்கையாம்படி பலகையடித்து வேலைக்கு உட்கார்ந்து வாங்க வருபவர்களை எதிர்பார்த்திருந்தான்.

மறுநாட்காலமே ஒருவன் சரக்குவாங்குவதற்காகக் கடைத்தெருவே போகையில், அங்கே தென்பட்ட விளம்பரத்தைப்பார்த்து: உள்ளே போய் இங்கே பாதிவிலைக்கு சரக்குகொடுக்கிறது மெய்தானா ஐயா என்ன: அங்கிருந்த பையன்: கிராக்கி வந்ததென்று சந்தோஷப்பட்டு, ஆம் மெய்தான்; உங்களுக்கென்னதேவையோ சொன்னீர்களானால் நாளைக்குச் சித்தம்பண்ணிவைக்கிறேன் என்று சொன்னான். அதற்கு அவன் எனக்குப் பத்து வண்டி அரிசிவேண்டும், பணத்தைக் கையிலே போட்டுவிடுகிறேன் என்று சொல்ல, சிறுவன் சரிதான், நாளைக்குப் பண்டி கொண்டுவாருங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டு, வேலைக்கு ஆரம்பித்து அவ்வளவும் யந்திரத்தினால் உண்டாக்கி, மறுநாள் அவன் வந்தவுடனே அட்டியில்லாமல் வண்டி கொள்ளமாட்டாத பாரம் ஏற்றினான். அதைப் பெற்றுக்கொண்டு அவன் சந்தோஷித்து உள்ளகிரயத்துக்கு அதிகம் கொடுத்துவிட்டுப்போனான். சிறுவனுடைய இச்செய்கையினால் அவன்பேர் ஊரெல்லாம் பரவி, வேலை மேன்மேலும் ஓயாமல் விருத்தியடைந்துகொண்டிருந்தது.

பணஞ்சேர்க்க வழியுண்டாகவே, தான் பெற்றுக்கொண்ட ஒரு மாசக் கெடுவு கழிந்துபோனால் என்னசெய்கிறதென்கிற துக்கம் உண்டாயிற்று.

எஜமானனுக்கும் இன்னும் சிலகாலம் விட்டுவைக்க மனமில்லை. பையன் சீக்கிரத்தில் அதிகபணம் குவித்துவிடப்போகிறானென்று பொறாமைகொண்டு அவனை எஜமானன் தனக்காக வேலைசெய்யச்சொல்லி அதன் வரும்படியைத் தான் அனுபவித்துக்கொள்ளும்படி இஷ்டங்கொண்டிருந்தான்.

இச்சங்கதி பிரசித்தமாகி எல்லோரும் ஐயோ பாவம்! இவ்வளவு கெட்டிக்காரப்பையன் தான் கஷ்டப்பட்டு வேலைசெய்து எஜமானனுக்கு வரும்படியைக் கொடுத்துவிடவேண்டுமாமே, இந்த அநியாயம் எங்கே உண்டு என்று அச்சிறுவனிடத்தில் உள்ள அன்பினால் அவனை எங்கேயாகிலும் காணாமல் ஓடிப்போகும்படி புத்திசொன்னார்கள். பையன் அப்பேச்சுக்கு இணங்காமல் அப்படிப்பட்ட காரியம் நான் செய்யேன், நூறுவரட்டும் நூறுபோகட்டும், எஜமானன் நிர்ப்பந்தத்திலிருந்து நீங்க நியாயமானவழியுண்டானால் ஆச்சுது; இல்லையாயின் தலையிலெழுத்துப்படி நடக்கிறதென்று சும்மாவிருக்க, ஒருநாள் அத்தேசத்து மந்திரி, பையன் சாமர்த்தியத்தைக்கேட்டு மகிழ்ந்து அவனண்டைவந்து, அப்பா! உன் காரியத்தைக்கேட்டு உன்னைத் தேடிவந்தேன். ஒருதவிபண்ணுவாயானால் எனக்குமிகுந்த சகாயமாயிருக்கும்; உனக்குப் பின்னுக்கு நலமாயிருக்கும். அதென்னெனில், இத்தேசத்து யுத்தவீரர்களுக்கு உடுப்பிற்காகப் பிறதேசத்திற்குச் சொல்லியனுப்பியிருக்கிறேன்; அது இன்னும் வந்துசேரவில்லை; ராஜாவோ கோபித்துக்கொள்ளுவார்போலிருக்கிறது. இரண்டாயிரம் உடுப்பு அவசியம் தேவையாயிருக்கிறது, அதைச் செய்துகொடுப்பாயானால் ராஜாவுக்குச் சிபார்சுசொல்லி உன்னை ஒரு ராஜ உத்தியோகஸ்தனாக்கிவிடுகிறேன்; அப்புறம் உன் எஜமானன் உன்னை அசக்கக்கூடாது என்று இனியவார்த்தைகளைச்சொல்ல, சிறுவன் அகமகிழ்ந்து: அப்படியே ஆகட்டுமையாவென்று சொல்லிப்போட்டு, பேச்சுத்தப்பாமல் தன் காரியத்தை நிறைவேற்றினான். மந்திரியும் ஆச்சரியப்பட்டுத் தான் வாக்குக்கொடுத்தபடி ராஜாவுக்குச் சரக்கு ஒப்பந்தக்காரன் என்று பேரிட்டு அந்த வர்த்தகனுக்குப் பிருது கடிதம் அனுப்பிவிட்டான்.

இவ்வளவும் மாசக்கெடுவு ஆவதற்கு இரண்டுநாள் முன்னேயே நடந்துவிட்டது. இதுகேட்டுக் கப்பல் அதிகாரி கோபாக்கிராந்தனாய் நாம் இவனை இப்படித் தனியேவிட்டுவைத்ததனாலல்லவோ இப்படி நேர்ந்தது; யானை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக்கொள்ளுவதுபோல நாமே நம்மைக் கெடுத்துக்கொண்டோம்; இனி அவனை நம்மதிகாரத்துக்கு உட்படுத்தக்கூடாதே; ஆகையால் அவனைக் கெடுக்க ஏதாவது வழிதேடவேண்டுமென்று நிச்சயித்து சமயம்பார்த்திருந்து, அச்சிறுவன் ஒருநாள் கதவை மூடாமல் அண்டைவீட்டிற்குப் போகிறதருணம்பார்த்து அவன் வீட்டுக்குள்ளே நுழைந்து சுற்றிப்பார்த்து ஒன்றையுங்காணாமல் திரும்பிவரும்போது ஒரு மூலையில் என்னவோ இருக்கிறதாகத் தட்டுப்பட அங்கே போய்ப் பார்த்தான். அவ்விடத்தில் தான் முன்னாலே பார்த்திருந்த யந்திரம் இருக்கக் கண்டு இதனால்தான் பையன் கொழுத்துப்போகிறான். நாம் இதை எடுத்துக்கொண்டுபோய்விட்டால் லட்சாதிகாரியாகலாம் என்றெண்ணி அதை எடுக்கப்போகும்போது, பையன் திரும்பி உள்ளே வந்துபார்த்து அவன் வந்தகாரியத்தை அறிந்துகொண்டு யந்திரத்தைக் கட்டைத்தடிகள் கொடுக்கவேணும் என்று பிரார்த்திக்க, அப்படியே தடிகள் ஒன்றின்பின்னால் ஒன்றாக எஜமானன்மேல் விழுந்து முதுகை இரத்தப்பிரவாகமாகும்படி செய்தன.

எஜமானன் தெப்பல் ஓயாது விழுவதைச் சகிக்கமாட்டாமல் ஒருவேளை அப்பா அப்பா விட்டுவிடு உன் காலில் விழுகிறேன் என்று நல்லதனமாயும், ஒருவேளை துஷ்டப்பயலே பார் உன்னை என்ன செய்துபோடுகிறேன் என்று பொல்லாததனமாயும் இம்சையினின்று தப்புவிக்கும்படி கூச்சலிட்டான். கடைசியில் ஐயோ பாவம் போதும் என்று பையனுக்கே தோன்றி பிறர் சொத்தின்மேல் இனிக் கைவையாதே, இப்போது கதவைத்திறந்து விட்டுவிடுகிறேன், இனி ஜாக்கிரதையாய்ப்பிழை, இன்னொருதரம் இப்படிச் செய்வாயானால் பிராணன் உன்னதென்று நினையாதே என்று புத்திசொல்லி யந்திரத்தை நிற்கச்சொல்லி வேண்டிக்கொண்டு எஜமானனை அந்தமட்டில் உயிரோடு விட்டான்.

அவன் முன்னிலும் அதிக கோபங்கொண்டு தன் எண்ணத்தை எப்படியாவது நிறைவேற்றக்கருதி அதற்கு வேறோருபாயம் ஆலோசித்தான். அதென்னவெனில், முன்னடந்த சங்கதி மறந்துபோகட்டும் என்று சில நாள் சும்மாவிருந்து அது மறந்துபோனவுடன் ஒருநாள் அச்சிறுவனிடஞ் சென்று போனதெல்லாம் போகட்டும் இனி நாம் பகையின்றி ஒன்றுக்கொன்றாயிருப்பது நலம் என்று சொல்லித் தந்திரத்தினாலே அவனைச் சிநேகமாக்கிக்கொண்டு நம்முடைய சிநேகிதர்களுக்கு ஒருநாள் விருந்து பண்ணிவைக்கவேணுமென்கிற ஆசை எனக்கு இருக்கிறது. அன்றையதினம் அடிநான் தோழனை நீயும் வரப்பிரார்த்திக்கின்றேன் என்று வேண்ட, கபடமற்ற அச்சிறுவனும் நல்லது ஆகட்டுமென்று ஒத்துக்கொண்டான். அப்படியே விருந்துதினம் அவன் வீட்டிற்குப்போய் நல்லநல்ல திண்டிகளெல்லாம் உட்கொண்டு சாராயமும் பூர்ணமாகக்குடித்துத் தன்னிலைமை தனக்குத் தெரியாமல் பையன் மயங்கிக்கிடந்தான். அத்தருணம் பார்த்திருந்து வர்த்தகன் அவன் வீட்டுச்சாவியைப் பிடுங்கிக்கொண்டு அவ்வீட்டுக்குப் போய் யந்திரத்தைத்தேடி எடுத்துக்கொண்டு யாருக்குந்தெரியாமல் கப்பலண்டை ஓடி அந்நிமிஷமே கப்பலேறிச் சொந்தவூருக்குப் புறப்பட்டுப் போய்விட்டான். சாயங்காலம் மயக்கம்தெளிந்து சிறுவன் எழுந்துபார்த்து ஒருவரையும் காணாமல் ஓ, ஓ, என்னவோ மோசம் நடந்திருக்கிறது என்றெண்ணிக்கொண்டு, தன் வீட்டுக்குப்போய்ப்பார்த்து யந்திரத்தைக்காணாமல் சோர்ந்துபோய் வர்த்தகன்தான் இதைத் திருடிக்கொண்டு போய்விட்டானென்று நிச்சயித்து ஊரிலுள்ளோரைச் சகாயமாய் அழைத்துக்கொண்டு கப்பலிருந்த விடத்தில் வந்து விசாரித்ததின்பேரில் கப்பல் மத்தியானமே புறப்பட்டுப்போயிற்றென்று தெரிந்துகொண்டு, இனி என்னசெய்கிறது, நாம் கொடுத்துவைத்தது இவ்வளவுதான். தெய்வசகாயத்தால் கொஞ்ச பணம் சேர்த்திருக்கிறேன்; இதைக்கொண்டு நம்ம காலத்தைத்தள்ளலாம் என்று தைரியம்பண்ணிக்கொண்டு உள்ளமட்டும் திர்ப்தியடைந்து அத்தை

செய்த பேருபகாரத்திற்காக அவளிடத்தில் நன்றியுள்ளவனாய் வெகுகாலம் வாழ்ந்திருந்தான்.

யந்திரத்தைத் திருடிக்கொண்டுபோன வர்த்தகன் தசை தன் பக்கம் திரும்பிற்று என்று குசாலடைந்து, இனி நமக்குமேல் யார் தனத்தில் நிகர்? ஒருவரும் இல்லை என்னும்படி பணஞ்சேர்த்துக்கொண்டபிறகு இது ஒருவருக்கும் உபயோகமாகாமலிருக்கும்பொருட்டு சுக்கல்சுக்கலாய் உடைத்து விடுவேன்; முன்னே அந்தத் துஷ்டப்பயல் என்னை அடித்தானே, அப்போது இந்த யந்திரம் அசையும்படி சொன்னசொற்களும் ஞாபகமிருக்கின்றன என்றிவ்வாறாக எண்ணமிட்டுக்கொண்டேபோனான். அப்படிப் போகும்போது பசியெடுத்து வேலைக்காரனை அன்னங்கொண்டுவை எனக் கட்டளையிட, அவன் வெளியே புறப்படும்போது உப்புகொண்டு, போகப்படாதென்று சொல்லுவார்களே, அப்படியே ஆச்சுது; அவசரத்தில் எடுத்துக்கொண்டுவரச் சரிப்படவில்லை. ஒரு உப்புக்கல்கூட இப்போது கிடையாது என்றான். அதுகேட்ட எஜமானன் அதுவிஷயத்தைப்பற்றி நீ சிந்திக்கவேண்டுவதில்லை; எதுவேண்டுமானாலும் அதை உண்டுபண்ணிக் கொடுக்க எனக்குச் சாமர்த்தியமுண்டு.

இப்போது திர்ஷ்டாந்தம் பார் என்று சொல்லிவிட்டு யந்திரத்தைத் தூக்கிவைத்து: யந்திரமே, யந்திரமே, கொஞ்சம் உப்பு உண்டாக்கிக் கொடுக்கவேண்டும் என்று அதைப் பிரார்த்தித்தான். அதுவும் வழக்கப்படி சுழலவாரம்பித்து உப்பைச் சுரக்கத்தலைப்பட்டது. வேலைக்காரன் உப்பு எப்படி வந்தது என்று ஆச்சரியப்பட்டு, ஒரு பெரிய குவியலானபிறகு உப்பு போதும், இன்னும் ஏதாவது கொடுக்கச்சொன்னால் நல்லது என்று எஜமானனோடு சொன்னான். அவனும் சேர்ந்த உப்பு போதுமென்று நினைத்து யந்திரத்தை நிறுத்தப்பார்த்தான். ஆனால் நிற்கும்போது சொல்லவேண்டிய சொற்கள் மறந்துபோயின. இதற்குள்ளே உப்பு கப்பலெல்லாம் நிரம்பியிருக்க இடமேயில்லாமற்போயிற்று. அதை எப்படியாகிலும் நிறுத்தவேண்டுமென்று தன்னாலானமட்டும் நானாவிதமாய் வேண்டிக்கொண்டான்: எல்லாப் பிரயத்தனமும் வீணாகப்போனது கண்டு கடைசியாகக் கோபம் வந்து அதை உடைத்துத் தள்ளிவிடுகிறதே சரி என்று தீர்மானித்து கோடாலியினால் அந்த யந்திரத்தை இரண்டாக உடைத்துவிட்டான். உடைத்த பிறகும், ஒன்றுக்கு இரண்டாய் இரண்டு துணுக்கைகளும் ஓயாமல் சுழன்று முன்னிலும் இரண்டுபங்கு உப்பு உண்டாக்கத்தொடங்கின. கப்பல் உப்பு பளுவைத் தாங்கமாட்டாமல் முழுகிப்போயிற்று. வர்த்தகனும் அவன் வேலைக்காரரும் மடிந்துபோனார்கள். யந்திரத்துண்டுகள்மாத்திரம் ஓயவேயில்லை.

அக்காலந்தொடங்கிக் கடல் உப்பாயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள்; அந்த உப்பு ஒருநாளும் வாங்கவேவாங்காது என்றும் சொல்லுகிறார்கள்; ஏனெனில், இரண்டு யந்திரங்களும் இன்னும் வேலைசெய்துகொண்டிருக்கிறதுந்தவிர, சிருஷ்டியுள்ளளவும் அப்படியே செய்துகொண்டிருக்குமாம்.

நவநாடக கதைகள்.

விக்கிரமோர்வசி.

(தொடர்ச்சி.)

ஒருகால் ஊர்வசி தன் நாயகனும் தானுமாய் அழகான காடு மலை முதலியவிடங்களில் போய் விளையாடவேண்டுமென்று ஆசை கொண்டு தன் கருத்தை அவனுக்குத் தெரிவிக்க, அவனும் அவள் கருத்துக் கிசைந்து ராஜ்யத்தை மந்திரிகள் வசம் ஒப்புவித்து, அவ் வணங்குடன் கூடப் புறப்பட்டுக் கைலாசமலைச் சாரலிலிருக்கின்ற கந்தமாதனபர்வதத்தினருகில் விளையாடிக்கொண்டிருந்தான். அப் போது ஊர்வசி, அவ்விடத்தில் ஓடுகிற மந்தாகினிநதியின் மணல் மேடுகளில் விளையாடிக்கொண்டிருந்த வித்தியாதர கன்னிகையினி டத்தில் தன் கணவன் ஆசைகொண்டதாக நினைத்து, உடனே கோ பமூண்டு, அவன் எவ்வளவு நல்வார்த்தைசொல்லியும் கேளாமல் பாதமுனிவர் சாபத்தால் மதிமயங்கிப் பக்கத்திலிருந்த குமார வனத்துட்பிரவேசித்தாள். சுப்பிரமணியக்கடவுள் தான் தவஞ் செய்ய விருப்பங்கொண்டு, அக்காலத்து அதற்கு யாராவது இடை யூறுசெய்வார்களென்று நினைத்து, இதற்குள் வருகிறவள் ஒரு கொடியாய்ப்போகக்கடவள் என்று சபித்து, அந்த வனத்துக்குக் குமாரவனமென்று தன் பெயரையும் கொடுத்து அதனுள் புகுந்து தவஞ்செய்துகொண்டிருந்தார். அதனால் ஊர்வசி அதனுள் நுழை ந்தமாத்திரத்தில் முல்லைக்கொடியாக மாறினாள். புரூரவசக்கர வர்த்தி, அவள் போனவழிதெரியாமல் சீதையைப்பிரிந்து தவித்த ஸ்ரீராமனைப்பார்க்கிலும் எண்மடங்கு அதிகமாய் விசனமடைந்து, விலங்கு பறவைமுதலிய பலவற்றையும் பார்த்துப் பேசிக்கொ ண்டு, பித்தன்போல் ஒன்றுந்தெரியாமல் அக்காடுமுழுதிலும் அல் லாடிக்கொண்டிருந்தான். அப்போ மழைக்காலம் வந்தது; அக் காலத்தில் சுகமாயிருப்பவருக்கும் வருத்தமுண்டாமாகையால் இக்காதலியை நடுக்காட்டில் பறிகொடுத்துத் தவிக்கின்றவனுக்கு நேர்ந்த துன்பம் வாயினாற்சொல்லக்கூடுமோ? அவன் அப்படியே அந்தக் காடுமுழுதிலும் அவளைத் தேடிப்பார்த்தும் காணாமையால், மறுபடியும் அவள் மறைந்தவிடத்திலேயே போய்ப் பார்ப்போ மென்று அவ்விடத்திற்கு வந்தான். அங்கே ஒரு பெரிய பாறை யின்கீழ் அதிக பளபளப்புள்ள மணியொன்றிருந்தது. அவன் அதைப்பார்த்து: இப்போ நாம் இதை எடுத்து என்னசெய்யப் போகிறோம்; ஊர்வசியிருந்தால் பயன்படும்; அவளைத்தான் இழந் துபோனோமே; ஏன் வீணாய் இதன்மேல் கண்ணீரைப்பெருக்கி அழுக்காக்கவேண்டுமென்று அதை எடாமல், ஒதுங்கி நிற்கையில், "குழந்தாய்! நீ அதை எடுத்துக்கொள்; அதற்குச் சங்கமனீயம்

என்றுபெயர். பார்வதிதேவியின் காற்செம்பஞ்சினின்றும் உண்டானது. தனக்கு வேண்டியது ஒன்று காணுமற்போனல் உடனே கொண்டுவந்து கூட்டும்" என்று வானத்தில் ஒரு சப்தம்கேட்டது. அந்தச் சப்தம் காதிற்பட்டமாத்திரத்தில் அந்த அரசன் பரமேசுவரரே தயைசெய்தாரென்று நினைத்து, அதை எடுத்து அதனோடு கொஞ்சிக்கொண்டிருக்கையில், எதிரில் பூக்களேயில்லாமல் நிரம்பத் தளிர்த்து அழகான ஒரு முல்லைக்கொடி தெரிந்தது; அதைக்கண்டு, இதென்ன ஊர்வசிபோலிருக்கின்றதே என்று அதனருகே சென்று அழுந்தக் கண்ணை மூடிக்கொண்டு, அதை ஊர்வசியாகவே தியானித்துக் கட்டிஅணைத்துக்கொள்ள, உடனே அது ஊர்வசியாக மாறிப்போயிற்று. மாறவே அவன், இதென்ன! நாம் நினைத்ததுபோல கைக்கும் ஊர்வசிபோலவே தட்டுப்படுகிறதே; ஊர்வசிதானே! நாம் இதுவரையில் இப்படி ஏமாந்துபோனது கணக்குவழக்கில்லையே, இப்போதும் கண்ணைத் திறந்தால் ஊர்வசியாயிராதோ என்னவோ என்று பயந்துகொண்டே மெல்லமெல்லக் கண்ணைத் திறந்துபார்த்தான். வெகுநாளாய்ப் பிரிந்துபோயிருந்த இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கவே அதிக சந்தோஷமடைந்து ஆனந்தபாஷ்பங்களைப் பொழிந்தனர். நாட்டைவிட்டு வெளியே வந்து வெகுநாளானபடியால் குடிகள் வருந்துவார்களென்று உடனே புறப்பட்டு ஊர்வசிக்குச் சாபம்நேர்ந்த வரலாற்றை வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டே மேகவாஹனத்தின் மேலேறிப் பட்டணம்வந்து சேர்ந்தார்கள்.

அன்றுமுதல் புரூரவசக்கரவர்த்தி ஊர்வசியோடுகூடவே ராஜ்யமெல்லாம் செழித்திருக்கும்படி அரசாட்சி செய்துகொண்டிருக்கையில், ஊர்வசி கருத்தரித்தனள். பிரசவகாலம் நெருங்கினபோது முன் தேவேந்திரன் சொன்னதை நினைத்து, நங்குழந்தை முகத்தை இந்த மஹாராஜன் பார்த்தால் உடனே நாம் இவனைவிட்டுப் பிரியவேண்டுமே என்றெண்ணி, அக்குழந்தையைப் பெற்றவுடன் சியவனரென்கிற ஒரு முனிவருடைய ஆச்சிரமத்துக்கு எடுத்துக்கொண்டுபோய், அங்கிருந்த ஸத்தியவதி என்பவளிடத்தில் ஒப்புவித்து அதற்குச் செய்யவேண்டிய ஜாதகரும நாமகரணமுதலிய விதிகளெல்லாஞ்செய்து, சகல வித்தைகளையும் கற்பிக்கும்படி சொல்லி விட்டுவிட்டுத் தன்னிடம்வந்துசேர்ந்தாள். அந்தக்கிழவியும் அக்குழந்தையை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்துச் சியவனமுனிவரைக்கொண்டு வேண்டியவையெல்லாஞ்செய்விக்க, அவனும் சகல சாஸ்திரங்களிலும், தனுர்வித்தையிலும் அதிக சமர்த்தனாய் அவ்விடத்திலிருந்த இருஷிப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டிருந்தான்.

ஒருநாள் அரசன்வீட்டில் திதியொன்று நேர்ந்தது; அதற்காக அவன் தன் தேவிமார்களோடுகூடப் பிரயாகைக்குப்போய் ஸ்நா

னஞ்செய்துவந்து சிங்காரித்துக்கொண்டிருக்கையில், ஊர்வசிக்குத் தலையில் முடிப்பதற்காக முன் அரணியத்தில் அகப்பட்ட சங்கமனீயமணியை ஒரு தாதிப்பெண் எடுத்துக்கொண்டுவந்தாள். அதை ஒரு கழுகு கண்டு மாமிசமென்று நினைத்து, அதை மூக்கிற் கொந்திக்கொண்டு வானத்தில் பறந்தோடிற்று. அதைச் சியவன முனிவர் ஆச்சிரமத்தில் இருந்த ராஜகுமாரன் கண்டு, 'அர்த்தநாராசம்' என்கிற ஒரு பாணத்தால் அடித்தான். உடனே அது சுருண்டு அந்த மணியை வாயில் கவ்விக்கொண்டு கீழேவிழுந்தது. அவ்வளவில் புரூரவசக்கரவர்த்தி அந்த மணியைக் கழுகெடுத்துக் கொண்டுபோனதாய்க் கேள்விப்பட்டு, பாதி அலங்காரஞ்செய்து கொண்டதுங் கொள்ளாததுமாய்ச் சரேலென்று எழுந்திருந்து; "இப்போது அந்தப் பறவை எங்கே" என்று பராக்கிரமம் பேசிக் கொண்டே வெளியேவந்து அது ஆகாயத்தில் பறந்தோடுவதைக் கண்டு தன் வில்லை எடுத்துக்கொண்டுவரக் கட்டளையிட்டான். அதற்குள் அந்தப் பறவை பாணத்துக்கெட்டாத தூரத்திற்போய்ச் சேர்ந்தது. அதுகண்டு அந்த ராஜா, அது வெகுதூரம் போய் விட்டது; இனிமேல் அதை அடிப்பது அசாத்தியம். தனுஸ்ஸு வேண்டுவதில்லையென்று சொல்லித் தன் காவலாளனைப் பார்த்து இது எங்கேயும் ஓடிப்போகமாட்டாது; அஸ்தமித்தால் தன் கூடு வந்து சேரும்; அது எவ்விடத்திலேயோ அதைத் தேடிப்பார்த்து எப்படியாவது அந்த மணியைக் கொண்டுவரவேண்டுமென்று நான் சொன்னதாய்ப் பட்டணத்து விசாரணைக்காரனுக்குச் சொல்லென்று கட்டளையிட்டான். அதைக் கேட்டமாத்திரத்தில் அந்த விசாரணைக்காரன் நாலண்டையும் ஆட்களைவிட்டுத் தேடும்படித் திட்டம்பண்ணினான். அப்படி அவர்கள் தேடிக்கொண்டுபோகையில் ஒருவன் அந்தக் கழுகு பாணத்தால் அடிபட்டு அந்தப் பாணத்தோடுகூட விழுந்திருப்பதைக் கண்டு அந்தப் பாணத்தையும் மணியையும் எடுத்துக்கொண்டுவந்து காவற்காரன்கையில் கொடுக்க, அவன் அதைக் கொண்டோடிவந்து அரசன் கையிற்கொடுக்க, அவன் அதை வாங்கிக்கொண்டு, இந்தப் பாணம் போட்டது யார்? உனக்குத் தெரியுமா என்றான். அதற்கு அந்தக் காவலாளன்: இதில் என்னவோ எழுதியிருக்கிறது; எனக்கின்னதென்று தெரியவில்லை; படித்துப்பார்த்தால் தெரியும் என்று சொல்லிவிட்டுத் தன் வேலைக்குப்போய்ச் சேர்ந்தான். உடனே அரசன் அதை எடுத்துப் படித்துப்பார்த்தான். அதில் "புரூரவசக்கரவர்த்திக்கு ஊர்வசியினிடத்தில் பிறந்த ஆயுஸ்ஸு என்பவனுடைய பாணமிது. பகைவர்களைப் பிராணனோடு கண்டால் உடனே கொன்றுவிடும்" என்று எழுதியிருந்தது. அதைப்பார்த்துத் தனக்குக் குமாரன் பிறந்த வழி என்னவென்று சிந்தித்துக்கொண்டிருக்கையில், அவன் பக்கத்திலிருந்த விதூஷகன் என்ன, அதைப்பார்த்து நீ ஆலோசிக்கிறு

யென்று கேட்க, அவன் அதில் எழுதியிருந்ததை வாசித்துச் சொன்ஞன். அதுகேட்டு விதூஷகன்: எது எப்படியாஞலும் ஆகட்டும், பரமேசுவரன் அனுக்கிரகத்தால் உனக்குச் சந்தானமுண்டாயிற்றே என்ருன். ராஜனும் இதென்ன வேடிக்கையாயிருக்கிறது!-நான் ஊர்வசியைவிட்டுப் பிரிந்தநாளெப்போ! அப்படியிருக்க, எனக்குத் தெரியாமல் பிள்ளை பிறந்ததென்ருல் நான் என்னசொல்லுவேன்; ஆனல் சிலநாள்மாத்திரம் கர்ப்பிணிபோலக் காணப்பட்டாள். அப்படிதானிருக்கட்டும், அதை ஒளிக்கவேண்டுவதென்ன; அதன் விவரம் நமக்குச் செம்மையாய்த் தெரியவில்லை. ஆனல் தேவரகசியங்கள் எவ்வளவோ இருக்கலாம்; எந்த சங்கதி எப்படிப்பட்டதோ என்று ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

இவர்கள் இப்படியிருக்க, அந்தச் சியவனமுனிவர் ராஜகுமாரன் செய்த முனிவர்களுக்கு ஒவ்வாத நடத்தையைக் கேட்டு, இனி இவன் இருஷிகளிருக்கிற இடத்தில் இருக்கத்தகுந்தவனன்று; பட்டணத்துக்கு இட்டுக்கொண்டுபோய் இவனைத் தாய்தந்தைகளிடத்தில் விட்டுவாவென்று ஸத்தியவதிக்குக் கட்டளையிட, அவளும் அந்த ராஜகுமாரனைக் கையும் வில்லுமாய் அழைத்துக்கொண்டு அரசனிடம் வந்தாள். -சக்கரவர்த்தி அவளைக்கண்டு, கைகூப்பி வணங்கிப் பூசித்து ஆசனங்கொடுத்து, அதில் அவள் உட்கார்ந்த பின்பு, வந்தகாரணத்தை வினவ: அவள், இந்தக் குமாரனை யாது காரணமோ ஊர்வசி குழந்தையிலேயே என்னிடத்தில் கொண்டு வந்துவிட்டு, இவனுக்கு யாவையுங் கற்பித்துக்கொடுத்துச் செம்மையாய்ப் போஷிக்கச்சொன்ஞள். நானும் இதுவரையில் அப்படியே காப்பாற்றினேன். இப்போது இவன் ஆகாசத்தில் ஒரு பக்ஷி தற்செயலாய்ப் பறந்தோடுவதைப்பார்த்து அதை ஒரு பாணம்போட்டு அடித்தான். அந்தச் செய்தி சியவனருக்குத் தெரிந்து, இவனைத் தாய்தகப்பன்மார்களிடத்தில் சேர்ப்பித்துவா என்று சொன்னதஞல், நான் இவனை அழைத்துக்கொண்டுவந்தேன். ஊர்வசியைப் பார்க்கவேண்டுமென்ருள்; அவன் அப்படியே ஆகட்டுமென்று ஊர்வசியை வருவிக்க, அவள் வந்து, ராஜசிங்காசனத்தின் கீழ்ப்படியில் தன் குமாரன் உட்கார்ந்திருக்கக்கண்டு: ஓஓ, ஸத்தியவதி! நான் மறைத்துவைத்ததை வெளிப்படுத்திஞளே என்று திகிலடைந்து, குமாரனைப்பார்த்த சந்தோஷத்தால் அதை மறந்து ராஜாவின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். அவளைக்கண்டு அந்த ரிஷிபத்தினி: இந்தக் குழந்தை எல்லா வித்தைகளிலும் பண்டிதஞயிஞன். அரசாளும்படியான வயதும் வந்தது. ஆதலால் உங்களிடத்தில் கொண்டுவந்து சேர்த்தேன்; என் காரியங்களெல்லாம் கெட்டுப்போகின்றன. சீக்கிரமாய்ப் போகச் செலவுகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு போகப் புறப்படும்போது, தன்

லைப் பின்தொடர்ந்துவந்த குழந்தையைச் சமாதானம்பண்ணி நிறுத்திவிட்டு ஆச்சிரமம் போய்ச்சேர்ந்தாள்.

அப்போது அந்த ராஜாவானவன், தேவேந்திரனுக்கு ஜயந்தன் என்று ஒரு குமாரன் அவதரித்திருப்பதுபோல் எனக்கும் ஒருவன் உண்டானான் என்று தன் பிள்ளையைப்பார்த்து மகிழ்ந்துகொண்டிருக்கையில், ஊர்வசி: தேவேந்திரன் என்கிற சொல்லைக் கேட்டவுடன் தன் சாபத்தை நினைத்துக்கொண்டு கண்ணீர்விட்டழுதாள். அது கண்டு புரூரவன், இதென்னவென்று மனங்கலங்கி ஊர்வசியைப்பார்த்து: என் கண்ணே! நம்முடைய வம்சத்திற்கு வித்தாய் ஒருவனுண்டானானே என்று நான் ஆனந்தமாயிருக்க, நீ ஏன் அழுகிறாயென்று அவள் கண்ணீரைத் துடைத்துக் கேட்க: ஊர்வசி, முன் நான் நாட்டியமாடுவதற்காகத் தேவலோகத்திற்குப் புறப்பட்டுப்போனேனே; அவ்விடத்தில் எனக்கு உன்னெண்ணமேதவிர வேறு நினைவேயில்லாமலிருந்ததனால், நாட்டியமாடினபோது வேறென்னவோ சொல்லவேண்டியதருணத்தில் உன் பேரைச் சொன்னேன். அதுகேட்டு என் நாட்டியகுருவான பரதமுனிவர் கோபித்து, இனி ஒருநாளும் உனக்குத் தேவலோகத்தில் வாஸம் நேராமல் போகக்கடவது என்று சபிக்க, அதற்குத் தேவேந்திரன், நீ உன் இஷ்டப்படியே நமக்குத் தோழனான புரூரவசக்கரவர்த்தியினிடத்திலே போய் அவரிடத்தில் ஒரு குழந்தையைப் பெற்று, அதை அவர் பார்க்கிறவரையில் அங்கேயேயிருந்து பின்பு நம்மண்டை வரவேண்டுமென்று எனக்கு உத்தரவுபண்ணினான். இப்போ அது நினைவுவந்தது. மஹாராஜாவைவிட்டுப் பிரிந்துபோகவேண்டுமே என்று விசனப்படுகிறேன். இதுதான் நான் அழுவதற்குக் காரணம் என்றாள். அதுகேட்டு அந்த ராஜா பெருமூச்சுவிட்டு, ஐயோ! மழைபெய்து குளிர்ந்துபோன மரத்தில் இடிவிழுந்தது போல் பிள்ளையைக் கண்டு மனம் குளிர்ந்திருக்கிற எனக்கு என்ன வந்து நேர்ந்தது என்று விசனப்படுவதைக் கேட்டு, ஊர்வசி: நமக்குக் குமாரன் அவதரித்தான், இனி நாம் இங்கே இருக்கவேண்டுவதென்ன, நம்மிடத்திற்குப் போவோமென்று நான் நினைக்கிறதாய்த் தோன்றுகிறதோ என்று சொல்ல, புரூரவன்: என்ன அப்படியிருக்குமா, உன் எஜமானன் கட்டளைப்படி நீ நடக்கவேண்டியதுதானே; நானும் உன் மகனுக்கு அபிஷேகம்பண்ணுவித்துத் தவசியாய்க் காட்டுக்குப்போகிறேனென்று, உடனே அபிஷேகத்திற்கு வேண்டியவையெல்லாம் சேகரிக்கும்படி மந்திரிகளுக்குத் திட்டம்பண்ணினான். அப்போது அந்தச் சிறுவன் தன் தந்தையைப்பார்த்து அதிக பலபராக்கிரமசாலிகளான அரசர்கள் ஆண்டுவந்த இந்த ராஜ்யத்தில் ஒன்றுந்தெரியாதவனை வைத்துவிட்டுப் போவது நியாயமா என்றுசொல்ல, அரசன்: அப்பா அது அப்படியன்று, இவைகளெல்லாம் ஜாதியைப்பற்றிவந்த தொழிலேதவிர

வயதால் வந்தவையன்று. சிங்கக்குட்டியும் யானையை அடிக்கிறது. பாம்புக்குட்டியின் விஷமும் எல்லா விஷத்தினும் அதிகமாய் இருக்கிறது பார் என்றான்.

அச்சமயத்தில் இந்தச் சங்கதி தேவேந்திரன் அறிந்து, புரூரவன் வனவாசியாய்ப் போவதை மறுக்கும்படி உடனே நாரத முனிவரை அனுப்பிவிக்க, அவர் அந்தப் பூலோக சக்கரவர்த்தியினிடத்திற்கு வந்து ஆசனத்தில் உட்கார்ந்தபின், அந்தத் தம்பதிகள் இருவரும் அவரைச் சேவிக்க, நீங்கள் ஒருநாளும் பிரியாமலிருக்கக்கடவீர்களென்று ஆசீர்வதித்தார். அதுகேட்டு அவர்கள் இருவரும் மனமகிழ்ந்து தங்கள் தங்கள் ஆசனத்தில் உட்காந்தார்கள். நாரதபகவான் புரூரவனைப்பார்த்து: நீர் காட்டுக்குப்போகத் துணிந்த சங்கதி தேவராஜன் அறிந்து, அந்த மஹாபுருஷனால் நமக்கு அடிக்கடி ஒத்தாசைகிடைக்கவேண்டியதாயிருக்கிறது; அவர் காட்டுக்குப்போவது நலமன்று; எந்நாளும் ஊர்வசியோடுகூடவே இருக்கலாமென்று சொன்னார் என்ன, அதுகேட்டு அவன் அடியேன் அவர் எப்படி நியமித்தால் அப்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன் என்றான். அதைக் கேட்டவுடனே தேவகன்னிகைகள் அனைவரும் இந்திரன் கட்டளைப்படி அந்த ராஜகுமாரனை இளவரசுப்பட்டத்தில் அபிஷேகம் செய்வதற்காக வேண்டிய புண்ணிய தீர்த்தம்முதலியவைகளை எடுத்துக்கொண்டுவர, நாரதர்முதலியவர்களெல்லாரும் அவனுக்கு அபிஷேகஞ்செய்துவிட்டுச் சந்தோஷமாய்த் தங்கள்தங்களிடம் போய்ச்சேர்ந்தார்கள்.

புரூரவசக்கரவர்த்தியும் இளவரசான தன் குமாரனையே சகல ராஜகாரியங்களையும் பார்க்கும்படி ஏற்படுத்தி தானும் அதிக குதூஹலமாய் ஊர்வசியோடுகூடவே வெகுநாள் வாழ்ந்திருந்தான்.

படிப்பினை.

இதில் 'தங்குறைதீர்வுள்ளார் தளர்ந்துபிறர்க்குறூஉம், வெங்குறை தீர்கிற்பார் விழுமியோர்' என்கிறபடி, மேலானவர் தமது துன்பத்தையும் பாராமல் தம்மை அடைக்கலம் புகுந்தவர்களை அபயங்கொடுத்து ஆதரிப்பார்களென்றும், தங்களுக்கு என்னவருத்தம் நேர்ந்தாலும் சரியானவழியிலேயே நடப்பார்களென்றும், நன்றி பாராட்டுங்குணமுள்ளவர்கள் உபகாரிக்கு எதையும் கொடுக்க உடன்படுவார்களென்றும், நல்லபெண்கள் புருஷரிஷ்டத்தை மிஞ்சிநடவார்கள் என்றும் இத்தன்மையான சில நீதிகள் விளங்குகின்றன.

நல்ல சகவாசம்.

ஒருவனுக்குள்ள வாடிக்கைகளும் கொள்கைகளும் ஏற்பாடுகளும் அநேகமாய் அவன் பண்ணுகிற சகவாசத்தினால் உண்டாகின்றனவேயல்லாமல், பிறக்கும்போதே கூடத் தோன்றினவையல்ல. சுபாவம் அல்லது இயற்கை என்று ஒன்றிருந்தபோதிலும், ஒருவனுடைய நடவடிக்கைகள் காரியாகாரியங்கள் அனைவற்றிற்கும் அது காரணமாகமாட்டாது. அப்பியாசத்தினாலும் சகவாசத்தினாலுமே அவைகளுள் அநேகம் உண்டாகின்றன. எவ்விதமானவர்களுடன் ஒருவன் நாடோறும் பேசிக் கூடிவாழுகிறானோ, அவர்களுடைய நடவடிக்கைகள்தான் அவனுக்கும் படியும். அவன் வேணுமென்று அங்கீகரித்து முயற்சிசெய்து அவைகளைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்பதில்லை. அவைகள் அவனிச்சையன்றியில் தாமாகவே படிந்துபோம். அப்படிப் படிந்துபோய் நிலைபெற்றபிறகு அவைகளை ஒழித்துவிடக் கருதினாலும் ஒழித்துவிடுவது யாருக்கும் எளிதான காரியமல்ல. நல்லொழுக்கங்கள் படிந்தால்தான்போகிறது; கெட்டவைகள் படிந்தால் என்ன செய்கிறது? இக்கெட்ட ஒழுக்கங்களிடத்தில் அவ்வளவு அஞ்சிக்கை ஏனெனில், பிறகு அவைகளை நீக்கத்தக்க பரிகாரமில்லாததினாலேதான். ஆகவே கெட்டநடத்தைகள் முதலே நெருங்கவொட்டாமல் ஜாக்கிரதையாயிருப்பது எவ்வளவு ஆவசியம். சத்சகவாசத்தினால் சன்மார்க்கமும், அற்பசகவாசத்தினால் தீநடத்தையும் படியுமாதலால், பின்னதை ஒழித்து முன்னதைக் கைக்கொள்ளவேண்டும். நல்ல சகவாசமாவது எந்தவிஷயத்தில் நல்லதாயிருக்கவேண்டுமென்றாலோ, அது அடியில்வரும் கதையினால் விளங்கும்.

சுந்தரமென்கிற ஒருவர் கலியாணம் என்னும் தன் பிள்ளையை வித்தியாசாலைக்கு அனுப்பும்போது நல்ல சகவாசம்பண்ணு என்று சொல்லி அனுப்புவித்தார். முத்து என்கிற மற்றொருவரும் தன் குமாரனாகிய மணி என்பவனை வேலை கற்றுக்கொள்ள அனுப்பும்போது சத்சகவாசத்தையே தேடு என்று புத்திசொல்லியனுப்பினார். இப்படி புத்திசொன்னவர்களிருவரும் ஒரே கருத்தைக்கொண்டு சொன்னார்களென்று தோன்றுமேயல்லாமல், வெவ்வேறு அபிப்பிராயங்கொண்டு சொன்னார்களென்று யாருக்குத்தோன்றும். ஆனால் அப்படியல்ல; சத்சகவாசம் என்பதனால் சுந்தரம் கருதியது என்னவெனில், தம்மைவிட ஐஸ்வரியத்திலும் அந்தஸ்திலும் மேலானவர்களுடைய சிநேகம், தனவான்களையும் அதிகாரஸ்தர்களையும் ஒருவன் சிநேகமாகக் கொண்டிருந்தால், அவர்கள் தங்களால் கூடினமட்டும் உதவிசெய்து அவனை நல்ல ஸ்திதிக்குக்